தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர்

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 19-3-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## உளுந்து மற்றும் பச்சைப்பயறை உடனடியாக விற்கவும்

பயறு வகைகள் மிக இன்றியமையாத உணவுப் பொருட்களாகும். இவற்றில் அதிக அளவு புரதச்சத்தும், மற்றும் அமினோ அமிலங்களும் செறிந்துள்ளன. இவை கால்நடைகளுக்கும் உணவாகவும் பயன்படுத்தப்படுகின்றன. உலகளவில் இந்தியா பயறு உற்பத்தி, பயன்பாடு மற்றும் இறக்குமதியில் பெரும் பங்கு வகிக்கிறது. இந்தியாவில் பயறுகளின் உற்பத்தித்திறன் அதிகமாக இருந்த போதும் உற்பத்தி மற்றும் நுகர்வுக்கு இடையே 2-4 மில்லியன் டன்கள் வரை இடைவெளி காணப்படுகிறது. இந்த இடைவெளி இறக்குமதி மூலம் ஈடுகட்டப்படுகிறது.

உளுந்து மற்றும் பாசிப்பயறு தமிழகத்தின் முக்கியமான பயறு வகைகளாகும். விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தற்போது உளுந்தின் விலை கிலோவிற்கு ரூ.52 மற்றும் பாசிப்பயறின் விலை கிலோவிற்கு ரூ.62 ஆகவும் உள்ளன. இச்சந்தையில், பிப்ரவரி 2014-ல் உளுந்திற்கு அதிகபட்சமாக கிலோவிற்கு ரூ.55ம், பாசிப்பயறுக்கு ரூ.66ம் விலை கிடைத்துள்ளது. பயறு உற்பத்தி குறைந்ததே இந்த விலை உயர்வுக்கு காரணமாகும்.

இந்திய பயறு வகை மற்றும் தானியக் குழுமத்தின் கணக்கீட்டின்படி இந்த வருடம் பயறுகளின் இறக்குமதியானது 2.6 மில்லியன் டன்கள் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் பயறு வகைகளின் உற்பத்தி அதிகரித்துள்ளதால் இறக்குமதி இவ்வருடம் குறைந்துள்ளது. வேளாண் அமைச்சகத்தின் நான்காம் முன்கணக்கீட்டின் படி இந்தியாவின் பயறு வகைகள் உற்பத்தி 2012-13ல் 18.45 மில்லியன் டன்களாகும். இது 2013-14ம் வருடத்தில் 19.7 மில்லியன் டன்கள் என அரசுக் கணக்கீடுகள் தெரிவிக்கின்றன. இந்தியாவில் பயறு வகைகளின் தனி நபர் நுகர்வானது சராசரியாக 14 கிலோவாகும். ஆனால், உலக சுகாதார மையத்தின் (WHO) கணக்கீட்டின் படி, இது 20 கிலோவாக இருக்க வேண்டும்.

இந்திய அரசின் நான்காம் முன் கணக்கீட்டின்படி 2012-13ல் இந்தியாவில் உளுந்து 1.90 மில்லியன் டன்களும் பாசிப்பயறு 1.20 மில்லியன் டன்களும் உற்பத்தி செய்யப்பட்டன. தற்போது உளுந்தும், பாசிப்பயறும் அறுவடை சமயத்தில் உள்ளன. எனவே விவசாயிகள் விளைவித்த உளுந்து மற்றும் பாசிப்பயறை இருப்பு வைக்கலாமா அல்லது உடனடியாக விற்கலாமா என்று தெரிந்துகொள்ள ஆர்வமாக உள்ளனர்.

இதன் பொருட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் கடந்த 10 வருடங்களாக விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய உளுந்து மற்றும் பாசிப்பயறின் விலைகளை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின் படி, ஏப்ரல் - மே 2014ல் உளுந்தின் விலை கிலோவிற்கு ரூ.52-53ம், பாசிப்பயறின் விலை கிலோவிற்கு ரூ. 62-64 வரையிருக்குமென்றும் கணிக்கப்பட்டுள்ளது. மே 2014க்கு பின் விலை ஏற வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன. எனவே விவசாயிகள் அறுவடை செய்த உளுந்தையும், பாசிப்பயறையும் சேமித்து வைக்காமல் உடனடியாக விற்பனை செய்ய பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>:–

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி - 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:–

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயறுவகைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி - 0422 -2450498

மக்கள் தொடர்பு அலுவலர்